செ.வெ.எண்: 865/2016 நாள்: 12.12.2016

# தமிழ் வளர்ச்சித் துறை

## செய்திக்குறிப்பு

மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கிடையே தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் 23-12-2016 ஆம் நாள் நடைபெறுதல் தொடர்பாக.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 23.12.2016 காலை 09.00 மணியளவில் நாகர்கோவில் சேது இலக்குமிபாய் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள கல்லுவீட்டில் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி மாணவர்களிடையே தமிழில் பேச்சாற்றலையும் படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திட மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின் கீழ் அரசு ஆணையின்படி ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசுத்தொகையாக ரூ.10000/-, இரண்டாம் பரிசுத் தொகையாக ரூ.7000/- மூன்றாம் பரிசுத்தொகை ரூ.5000/-மும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். போட்டிகள் பற்றிய விவரங்கள் சுற்றறிக்கை வாயிலாகக் கல்லூரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் சென்னையில் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கு பெறுவர்.

இப்போட்டிகளில் மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**அன்புடன்,**
**(ஒம்)திரு.சஜ்ஜன்சிங் ரா சவான்,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்.**

**/ நேர்ப்படி /**

**தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்(பொ),**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலம், கன்னியாகுமரி மாவட்டம்.